ஸ்ரீ திரிபுரிசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

सन्तप्तानां भवदवथुभिस्स्फारकर्पूरवृष्टिः
मुक्ता यष्टिः प्रकृतिविमला मोक्षलक्ष्मी मृगाक्ष्याः ।
अद्वैतात्मानवधिकसुखासारकासारहंसी
बुद्धेर्लब्ध्यै भवतु भगवत्पाददिव्योक्तिधारा ॥

பிரியவாசகர்களே ? ஸ்ரீ பகவத் பாதாவதாரதினமாகிய இந்நாளே நன்னாளாகும் இதுதான் ஸுதினம், நாம் தினந்தோறும் பிரும்மவித்யாசார்யாளாகிய பகவத் பாதாளுடைய அவதாரவைபவத்தையே தான் அனுஷ்டிக்கவேண்டியிருக்க, இன்றைக்கு மட்டிலும் அவாளுடைய அவதார மஹோத்ஸவத்தை அனுஷ்டித்து வருவது, கொஞ்சம் விஷாதஸ்தானந்தான், ஸ்ரீ பகவத்பாதாளால் உலகமனைத்தும் உஜ்ஜீவிக்கும் பொருட்டுசெய்யப்பட்ட ஒவ்வொரு காரியங்களையும் கவனித்தால் அவாளுடைய அபாரமஹிமை புலப்படும். அவாளுடைய, பாவனகம்பீரபாஷ்யாதி கிரந்தங்களின் கௌரவத்தை மதாந்தரஸ்தர்களும் மறைப்பதில்லை. சத்துருக்களின் கல்மனமும் கரைந்துவிடும், ஜீவர்களின் மனப்பக்வத்திற்கேற்றவாறு செய்யப்பட்ட பிரகரண கிரந்தங்களொன்றே அவாளுடைய பரத்வத்தைத் தெளிவிக்கின்றது உலகமெங்கும் பாவனபாதந்யாஸங்களால் பரிசுத்தம் செய்து, ஸமரஸாத்வைத ஸித்தாந்தத்தையும், ஷண்மதங்களையும், வியவஸ்தைசெய்து வந்ததை பராமர்சித்தால் அவாளுடைய அதிக காருண்யம் விளங்கும், தாம் செய்த காரியங்களுக்கு யாதொரு ஹானியும் நிகழாவண்ணம் ஸ்ரீமடாம்னாயங்களை ஏற்படுத்தியிருப்பதைப்பார்த்தால் தீர்க்கதரிசித்வம்முதலிய அவதாரானுகுணகுணம் அவாளிடம் அதிகமாகப் பிரகாசிக்கும். இவைகளால் அவாள் அவதாரபுருஷாளென்பது வெளிப்படை. இவ்விஷயம் ஸ்ரீருத்திரம், சிவரஹஸ்யம் வாயு கூர்மபுராணம் முதலிய சிறந்த பிரமாணங்களாலும் கூறப்பட்டிருக்கிறது. கிரியாசக்திப் பிரதானமாயுள்ள ஸ்ரீராமகிருஷ்ணாதி அவதாரங்களைக்காட்டிலுங்கூட ஞானசக்திப்பிரதானமான பகவத்பாதாவதாரமே மேலானதாகும். வெகு புத்திசாலிகளாலும் ஜனங்களுடைய துராக்கிரஹப் பிரவிருத்திநிவிருத்தி செய்யமுடியாது. அது அவதாரபுருஷகாரியமேயாகும். பகவத்பாதாளை அவாளுடைய காலத்தில் போற்றிப் பணிவிடை செய்யாத ஜனங்களில்லை, அரசர்களுமில்லை. ஆதலால் அவாள்தான் இவ்வுலகத்திற்கே உத்தமகுருஸ்தானம் வஹிப்பவர்களாவார்கள். ஸ்ரீபகவத்பாதமுகமண்டலத்திலிருந்து வெளிக்கிளம்பிய பாஷ்யாதிக்கிரந்தங்களைக் கொண்டுதான் ஸனகாதிமகரிஷிகளும் ஆத்மவிசாரம் செய்துவருகிறார்கள். ஸ்ரீபகவத்பாதாளின் வசனம் ஒன்றுதான் ஸம்ஸாரிகளின் ஸம்ஸாரதுக்கத்தைப்போக்க வல்லமையுள்ளது. ஆதலால் அவாளுக்குப் பிரத்யுபகாரம் நாம் செய்வது அவதாரதினத்திலாவது அவாளை அர்ச்சிப்பதும் அவாளுடைய அவதார காரியத்தை சிரவணம் செய்வதுந்தான். ஆகையால் ஆஸ்திகரனைவரும் ஸ்ரீபகவத்பாதாளிடம் பக்தி செலுத்தி அவாளுடைய அனுக்ரஹபாத்திராளாகும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

जन्मकर्मच मे दिव्यमेवं यो वेत्ति तत्त्वतः ।
त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन ॥

# ஆர்யதர்மம்.

ப்ரஜாபதி-ஸு சித்திரை-மீ கம்உ

உ

ஸ்ரீகுருப்யோ நம:

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்

ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும்

பிரஜாபதிவருஷத்திய ஸ்ரீசங்கரஜயந்தி மஹோத்ஸவ

## வேதாந்தஸபா பிரகடனப்பத்திரிகை.

ஸ்ரீகைலாஸவாஸியான பரமேசுவரன் பிரம்மாதிதேவர்களின் பிரார்த்தனைக்கிணங்கி லோக க்ஷேமார்த்தமாய் தர்மஸ்தாபனம் செய்யவேண்டி சுமார் 2,500 வருஷங்களுக்குமுன் இப்புவியில் காலடி என்னும் க்ஷேத்திரத்தில் அவதரித்து "ஸ்ரீசங்கரர்" என்னும் நாமதேயத்துடன் தேசமுழுவதும் திக்விஜயஞ் செய்து அநேக துர்மதங்களைக்கண்டித்து ஷண்மதஸ்தாபனஞ் செய்து அத்வைதமதத்தை நிலைநாட்டி உத்தமமான பல க்ஷேத்திரங்களில் மந்திரஸ்தாபனங்களை செய்தார்கள் என்பதும் ஸ்ரீ சங்கரபகவத் பாதமூர்த்திகள் கடைசியில் மோக்ஷதகாங்களில் ஒன்றாகிய ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்திரத்தை அடைந்து அந்த க்ஷேத்திரத்தை ஸ்ரீசக்ராகாரமாய் நிர்மாணஞ்செய்து பிந்துஸ்தானத்தில் ஸ்ரீகாமகோடி பீடத்தை ஸ்தாபனஞ்செய்து ஜகதம்பிகையான ஸ்ரீகாமாக்ஷிதேவியின் ஸந்நிதானத்தில் ஸ்ரீ சக்ரப்பிரதிஷ்டைசெய்வதும் ஸர்வக்ஞ பீடாதிரோஹணம் செய்தும், இன்னும் ஸ்ரீகாமாக்ஷிஸந்நிதானத்தில் அர்ச்சாரூபமாய் விளங்கிக்கொண்டு பக்தகோடிகளுக்கு அனுக்ரஹம் புரிந்தும் வருவது யாவரும் அறிந்த விஷயமே.

அப்பேற்பட்ட ஸ்ரீபரமாசாரியாளுடைய அவதார தினமாகிய நாளது பிரஜாபதி-ஸு சித்திரை-மீ 9உ (22—4—31) புதவாரம் முதல் சித்திரை-மீ 18உ (1—5—31) சுக்கிரவாரம் முடிய ஸ்ரீ காமாக்ஷியம்பாள் ஆலயத்தில் ஸ்ரீமத்ஆசார்யபகவத்பாதமூர்த்தியின் ஸந்நிதானத்தில் ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் அவர்களின் ஆக்ஞையைமுன்னிட்டு,

பிரதிதினம் வேதபாராயணம் உபநிஷத்பாராயணம், ப்ரஸ்தானத்ரய பாஷ்யபாராயணம், மஹந்யாஸ ஜபம் முதலியதும், காலை மாலைகளில் விசேஷபூஜை, அர்ச்சனை அபிஷேகம் முதலியது நடத்தி, ஸ்ரீபரமாசார்ய மூர்த்திக்கு ஸாயங்காலத்தில் பிரகாரப் பிரதக்ஷிண உத்ஸவமும் உபந்யாஸங்களும் * பூர்த்தி தினமாகிய சித்திரை-மீ 18௳ சுக்கிரவாரத்தன்று ஸ்ரீ அம்பாளுக்கும் ஸ்ரீ ஆசார்யமூர்த்திக்கும் ஸகல ஸந்நாஹவைபவங்களுடன் ராஜவீதியில் வீதிப்பிரமண மஹோத்ஸவ உத்ஸவம். இவ்விதம் ஸ்ரீமத் ஆசார்யஜயந்தி மஹோத்ஸவம் நடைபெறுவதோடு சித்திரை-மீ 16௳ (29—4—31) புதவாரம் முதல் 18௳ (1—5—31) சுக்கிரவாரம் முடிய மூன்று தினங்கள் காஞ்சியில் ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள் அவர்கள் ஸ்ரீமடத்தில் வேதாந்த வித்வத்ஸதஸ்ஸும் நடத்துவதாய் நிச்சயமாய் இருக்கிறது.

ஆஸ்திகமகாஜனங்கள் அனைவரும் ஷை மஹோத்ஸவகாலத்தில் ஸ்ரீமத்ஆசார்ய மூர்த்தியைத் தரிசித்தும், வித்வத்ஸதஸ்ஸில் பண்டித உத்தமர்கள் நடத்தும் வாக்யார்த்த ஸத்விஷய உபந்நியாஸாதிகளைச் சிரவணம் செய்தும், ஸ்ரீபரமாசார்ய பூர்ணாநுக்கிரஹபாத்திரளாய் ஐஹிகாமுஷ்மிக சிரேயஸ்ஸுகளை அடையவேண்டுமாய் க்ஞாபிக்கப்படுகிறது.

T. S. ராஜு அய்யர்,
மானேஜர்,
ஸ்ரீகாமாக்ஷி அம்பாள்தேவஸ்தானம், காஞ்சீபுரம்.

☞ K. குப்புஸாமி அய்யர்,
ஸ்ரீ காமாக்ஷியம்பாள் தேவஸ்தானம் ஆதீன பரம்பரைதர்மகர்த்தரவர்களாகிய ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்காராசார்யஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமடம் ஸ்ரீகார்யம் ஏஜண்டு கும்பகோணம்.

* உபந்நியாசக் கிரம விபரம் பின்பு தெரிவிக்கப்படும்.

## ஸ்ரீ பிராப்தி அல்லது பொருளடைதல்.

(உகூக-வது பக்கத்தொடர்ச்சி)

பதிவிரதைகளான ஸ்திரீகளிடத்திலும், நல்ல அலங்காரங்கள் செய்துகொண்டு மங்களமான ஸ்வபாவமுள்ளவளிடத்திலும், உண்மைபேசுகிறவளிடத்திலும், பார்வைக்கு அழகுள்ளவளிடத்திலும், நல்ல குணமுள்ளவளிடத்திலும், இவர்களிடத்தில் நித்தியம் வசிப்பேன். பாபமான ஆசாரமுள்ளவளிடத்திலும், அதிகசுவையுடன்

புசிப்பவளிடத்திலும், தைரியமில்லாதவளிடத்திலும், கலகஞ்செய்யும் ஸ்வபாவமுள்ளவளிடத்திலும்,எப்பொழுதும் தூங்குகிறவளும் எப்பொழுதும் படுத்துக்கொண்டே இருப்பவளும், இப்படிப்பட்ட ஸ்திரீகளிடத்தில் வசிக்கமாட்டேன். வாகனங்களிலும், கன்னிகைகளிடத்திலும் ஆபரணங்களிலும், யாககருமங்களிலும், நீருண்ட மேகங்களிலும், புஷ்பித்த தாமரையோடைகளிலும், சரத்கால சந்திரிகையிலும், நக்ஷத்திர மார்க்கங்களிலும், யானைகளிடத்திலும், கோக்களிடத்திலும், மலர்ந்த தாமரை புஷ்பங்களிலும், தபஸ்விகள் சித்தர்கள் பிராமணர்கள் இவர்கள் வாஸஞ்செய்யும் நதிதீரங்களிலும், நித்தியமாக வசிக்கின்றேன். அரசர்களிடத்திலும், ஸிம்மாஸனத்திலும், ஸத்புருஷர்களிடத்திலும், எந்தவீட்டில் அக்னியில் ஹோமம் செய்யப்பட்டும் பிராம்மணர் தேவர் இவர்கள் பூஜைசெய்யப்பட்டும் அந்தந்த காலங்களில் புஷ்பங்களால் அர்ச்சனை முதலிய செய்யப்பட்டும் வருகிறதோ, அந்த வீட்டில் சந்தோஷமாக வாஸம்செய்வேன். பிரதிதினத்திலும் வேத பாராயணம் செய்துகொண்டுவரும் பிராமணுளிடத்திலும், தான தர்மத்தில் ஆசைகொண்டார்களிடத்திலும் ஸ்வதர்மத்தை நடத்திவரும் க்ஷத்திரியர்களிடத்திலும், கிருஷிமுதலிய காரியங்களைச்செய்யும் வைசியர்களிடத்திலும், சுசுரூஷைசெய்துவருபவரும் சூத்திரர்களிடத்திலும், வாஸம்செய்வேன். ஸ்ரீமந்நாராயணனிடத்தில் ஸ்வரூபத்துடன் ஒரேமனதாக வாஸம் செய்கிறேன். அவரிடத்தில் தர்மமும் பிராம்மண விசுவாஸமும் பிரியமும் குடிகொண்டதாகயிருக்கிறது. ஆகையால் அந்த நாராயணனைத்தவிர மற்ற விடங்களில் அம்சரூபமாக (அதாவது மனதினல் நினைப்பது) என்கிற பாவரூபமாகத்தான் வாஸம்செய்வேன். இவ்விதம் எந்த புருஷனிடத்தில் பாவரூபமாக (भावरूप) வசிக்கின்றேனே அவன் தர்மம் யசஸு அர்த்தம், காமம், இவைகளால் விருத்தி அடைகிறான் என்று இவ்விதம் ருக்மணீதேவிக்கு ஸ்ரீதேவியானவள் கூறியிருக்கிறாள். இந்த சரித்திரத்தை விசாரித்தால் நாம் எப்படிப்பட்ட நியமங்களைச்செய்து இந்த ஸ்ரீயை விருத்தி செய்துகொள்ள வேண்டுமென்பது நன்கு விளங்குகிறது, ஆகையால் இந்த போக ஸ்ரீயை சம்பாதிப்பதும் சுலபமாகக் காணப்படவில்லை. ஆனல் உலகத்தில் அனேகர்கள் பிறப்புமுதல் ஸம்பத்துள்ளவர்களாகவும்லௌகிகமான போகங்களை அனுபவித்துக்கொண்டு

வருகிறார்களைக் காண்கிறோம். அவர்களிடத்தில் ஒருவிதமான நியமங்களுமில்லாமலே மிகுந்த சம்பத்தாயிருக்கிறதேயென்று நினைக்கலாம். ஜன்மாந்திர புண்ய விசேஷத்தால் இந்த ஜன்மத்தில் பொருள் சேர்ந்திருக்கிறதென்று நினைக்கவேணும், அதோடு நாளடைவில் பொருள் குறைந்து 'எவ்வளவு சொத்துக்களிருந்தன, அவ்வளவும் அழிந்துபோய் விட்டன.' என்றும் கூறுகிறவர்களையும் நாம் பார்க்கிறோம். விருத்தி செய்வதென்றால் வட்டிக்குக் கொடுப்பதுதான் விருத்தியென்று சிலர் கூறுவதையும் நாம்பார்க்கின்றோம். பொருள் விருத்திசெய்ய இதுகாரணமாகாது. அதற்கு சொல்லிய விதிப்படி தானம் கர்மம் ஜபம் தபம் ஹோமம் இவைகளை அனுஷ்டிப்பதுதான் ஸ்ரீயை அடையக் காரணமாகும். இப்படி ஸ்ரீயை விரும்புபவனுக்கு ஏற்பட்டநியமங்களை ஒருபெரியார் கூறுகிறார்.

नाभ्यक्तोऽस्यान्न नग्नस्सलिलमवतरेन्न स्वपेद्वाऽशुचिस्सन् ।
नाभ्यंज्यान्नैव चाद्यात्तिलरुहलवणे केवलं नैत्रदोषा ।
वक्त्रे लिंपद्वदेन्नानृतमपि मलिनस्स्यान्न विल्वांबुजन्म
द्रोणाब्जौ धारयेत् के भुवमपि न वृथैवालिखेदिन्दिरार्थी ॥

सुविमलचरितस्स्याच्छुद्धमाल्यानुलेपा
भरण वसनदेहो मुख्यगन्धोत्तमांगः ।
सुविशदनखदन्तः शुद्धधीर्विष्णुभक्तो
विमलरुचिरशय्यः स्याच्चिरायेन्दिरार्थी ॥

ஸ்ரீ காமகனாகவிருப்பவன் எண்ணைத் தேய்த்துக்கொண்டு ஒன்றையும் புசிக்கலாகாது. நிர்வாணமாக ஜலத்தில்இறங்கக்கூடாது. அசுத்தத்துடன் படுக்கக்கூடாது. எண்ணைதேய்த்துக்கொள்ளக் கூடாது. எண்ணையும் உப்பையும் கேவலமாகப் புசிக்கக்கூடாது. கையினால் முகத்தை தடவக்கூடாது. பொய்சொல்லக்கூடாது. அழுக்கடைந்தவனாக இருக்கக்கூடாது. பில்வம் தாமரைப்பூ தும்பைப்பூ இவைகளை சிரசில் தரிக்கக்கூடாது. விருதாவாக கோடுகிழிக்கக் கூடாது. பரிசுத்தமான நடவடிக்கை உடையவனாகவும், சுத்தமானமாலை கெந்தம் ஆபரணம் வஸ்திரம் சரீரம் இவைகளுடையவனாகவும், நல்ல வாஸனையுடைய சிரசும் சுத்தமான நகம் பற்கள் இவைகளுள்ளவனும், சுத்தமான புத்தியும்,

விஷ்ணுபக்தியுள்ளவனாகவும், சுத்தமான படுக்கையும், உள்ளவனாகயிருந்தால் ஸ்ரீயை சீக்கிரமாக அடையலாம். என்று இவ்விதமான நியமங்களுடன் ஸம்பாதித்தபொருளை நல்ல பாத்திரமறிந்து தானம் முதலிய விநியோகம்செய்து, யாகம் முதலான கருமங்களையும் செய்து பிராம்மண விநியோகம்செய்வானாகில் ஒன்றுக்கு பத்துபங்காக விருத்தியடைவதோடு சித்தசுத்தியுண்டாகிமோக்ஷ ஸ்ரீயை அடைவான் என்பதில் சந்தேகமில்லை. மேற்கூறியபடி நடப்பவனிடத்தில் ஸ்ரீயானது நித்தியமாயும் ஸ்திரமாயும் வாஸம் செய்கிறது.

கச்சபேசுவரசாஸ்திரிகள்.

---

# புராணவிமர்சம், தர்மமார்க்கம்.

———0———

தேச சேவையிலும், தன் குலாசாரத்திலும், தர்மமார்க்கத்திலும், அசையாமல் சென்றுவரும் பண்டித மாளவியாவை அறியாதார் இல்லை. இவர் துராசாரப்பிரசாரமாகிய இக்காலத்திலும் சுதர்மத்தை விடாமல் சுயம்பாகம் செய்து உண்பவர் என்பது ஓர் முக்கிய விஷயம். இது இவரது உன்னதகுலமகிமையையும், சாஸ்திரானுஷ்டானத்தையும், நன்கு விளக்கி வருகிறது. ஆனால் இவரிடம் ஓர் குறை மாத்திரம் இருந்துவருகிறது. அதாவது காசியில் தன் முயற்சியால் வைதீக முறையில் வேத சாஸ்திரங்களைப்படிக்க நியமித்திருக்கும் கலாசாலையில் மாணவர்களுக்கு தெய்வபக்தியைப் புகட்ட ஓர் விசுவேசுவர ஆலயம் கட்டுகிறார் என்றும் 11ம்தேதி சுவாமிதபோநிதி என்பவரைக் கொண்டு துடக்கம் செய்யப்பட்டதென்றும், இவ்வாலயத்தில் பஞ்சமரும் நுழையவேண்டுமென்றும் தனதுஎண்ணத்தை வெளியிட்டாரென நமது பத்திரிகையில் கண்ணுற்றோம்.

पुण्यं सुखार्थी कुर्वीत दुःखार्थी पापमाचरेत् ।
द्वयोरेकतरं लोके गृह्णीत कुशलो जनः ॥

மனிதன் சுகத்தைக்கருதி புண்ணியத்தையோ, துக்கத்தைக்கருதி பாபத்தையோ, இவ்விரண்டிலொன்றை புத்தியுள்ள விவேகி செய்கிறான். இதனால் புண்ணியம் சுகத்தையும் பாபம் துக்கத்தையும் தருகிறது. சாஸ்திரமார்க்கம் புண்ணியமும், அதற்கெதிரிடை

யான மார்க்கம் பாபமுமாம். இஃதையறிந்த விவேகி புண்ணியத்தையே செய்கிறான். உலகில் சாதுர்வண்யமும் அதற்கதிகமாக பற்பல ஜாதிப் பிரிவினைகளும் ஆதிகாலம் முதற்கொண்டே ஒவ்வொரு காரணங்களைக்கொண்டு பிறந்திருக்கின்றன. துராசாரனாகிய வேனன் என்ற ராஜனின் இடது கையை ரிஷிகள் கடைந்தகாலத்தில் அவனது பாபங்களே உருவாய் ஒரு புருடரூபத்தால் வெளிவரவே அவரை நிஷதர் என்று பெயரிட்டு ரிஷிகள் வெளியில் தள்ளிவிட்டார்கள். இதனால் நிஷதஜாதி பாபத்தாலுண்டானவை எனவும், தேவராஜன் தனது மாதாவின் கர்ப்பச்சேதம் செய்தகாரணத்தால் புருணஹத்தி பாபத்தையடைந்து அதை விலக்க புண்ணிய தீர்த்த ஸ்னானங்கள் செய்துவரவே இந்திரனின் சரீரத்திலிருந்த பாபங்கள் ஒருங்கே சேர்ந்து ஒரு மூர்த்தியாய் வெளியில் வரவே பகவான் அவனுக்கு புளிந்தன் எனப் பெயரிட்டு ஹிமவத்கிரியில் வசித்துவரும்படி ஆஞ்ஞாபித்தார் என்றதால் புளிந்த ஜாதியும் பாபரூபமெனவும், விளங்கிற்று. தவிர வசிஷ்டரின் காமதேனுவை விசுவாமித்திரராஜ தூதர்கள் பலாத்காரமாகக்கொண்டு போகுங்கால் வசிஷ்டரின் உத்திரவின்படி காமதேனு தன் ஜீவரக்ஷணத்தின்பொருட்டு சப்தம், முகம், பின்பாகம் முதலியவிடங்களிலேயிருந்து பல நீசஜாதிப் பிரிவினைகளை உண்டாக்கினதாகவும் வசிஷ்டசாபத்தால் திரிசங்கு ராஜன் சண்டாள ஜாதி ரூபத்தையும் அதற்குற்ற மதத்தையுமடைந்து கிலேசமடைந்தார் எனவும் சூரியவம்ச ராஜனொருவன் வசிஷ்டருக்கு நரமாமிசபோஜனம் செய்துவைத்ததின் குற்றத்திற்காக நரமாமிசம் புசிக்கும் ராக்ஷஸனாக சபித்தார். அந்த ராஜனும் ராக்ஷஸரூபத்துடன் வனத்தில் சஞ்சரித்து வரவே ஒரு சமயம் வசிஷ்டபுத்திரர்கள் 100 பெயர்களையும் கொன்று தின்றான் எனவும், ஜாதிப் பிரிவினையின் பேதத்தையும், மததர்மத்தையும் இவ்விதம் புராணங்கள் போற்றி வருகின்றன. இவ்வகையான புராண சரித்திரங்களிலே இருந்து நீச ஜாதி என்பது ஒரு பிரத்தியேக வகுப்பாக தொண்டுதொட்டு இருந்தே வருகிறதென்பது நிச்சயம் இம்மாதிரியான சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த புருடர்களும் சாஸ்திரவிருத்தமான பஞ்சமர்களின் சம்சர்க்கத்தைச் செய்து வருவதற்காக ஓர் புது வழி துறந்துவைப்பது விந்தையேயாம். அநீதியான இவ்வழியில் செல்வதும், அக்னியை வஸ்திரத்தில்

வைத்துக் கட்டிக்கொள்வதும் சமமாகவேயாகும். இம்முறைமையானது ஆஸ்திகர்களை புண்படுத்துமென்பதில் ஐயமில்லை. அக்னியின் சேர்க்கை பொசுக்குவதுபோல் புண்யசேஷங்களை, பஞ்சமரின் சேர்க்கையும் பொசுக்கிவிடுமென்பதில் சந்தேசமில்லை.

பயிற்தொழில் செய்பவன் எள்ளு, கொள்ளு, நெல்லு, முதலிய பல தானியங்களை கலந்து விதைத்து அதன் பலன்களை அடையாமல் கஷ்ட்ட நட்டப்பட்டு மனமேங்குவதுபோல பல ஜாதிகளையும் ஒன்றுசேர்த்து ஈசனருள்பெற்று ஜீவிக்க எண்ணுவதும், பின்னால் ஜென்மத்தைக் கெடுத்துக்கொண்டோமென பச்சாத்தாபத்தால் தபிப்பதும் உண்மையாம். ஆனால் இந்த அநீதத்தை காலகாலனாகிய பகவத் சந்நிதிலேயே அவரை சாட்சியம் நிறுத்திச்செய்ய உறுதிசெய்திருப்பதினால் இவ்விஷயத்தில்பகவான் பொருப்பாய் நிற்கிறார். ஆனதுபற்றி ஆஸ்திகர்கள் கால காலனை நம்பி மனச்சாந்திபெற்றுவசிக்க இங்கு சிறிது இடம் கிடைத்தது.

பண்டிதருக்கு ஈச சிருஷ்டியில் சேர்ந்தவையாவும் ஒன்றுதான்என்ற அபிப்பிராயமிருக்கலாம். ஆனால் அதைச்சற்று விசாரிப்போம். இவ்வுலகில் எல்லாம் ஈசனருள் பெற்ற பிராணிகள்தானே. அப்படிக்கிருக்க ஏன் வித்தியாசபாக சில விதிகளைச் சொல்லி பஞ்சமர்களை விலக்க வேண்டுமென்றால், ஜலமெல்லாம் நாராயண ரூபமென்ற சாஸ்திரம் சொல்லுகிறது. ஆனாலும் எல்லா ஜலமும் உயர்ந்தபடியாய் உபயோகப்படுத்த சாத்தியமில்லாமல் இருக்கிறது. ஒருவகை ஜலம் கைகால் கழுவவும், மற்றொன்று ஸ்னானதிகளுக்கும், இன்னொருவகை ஜலம் பானத்திற்கும் வேறுவிதமான ஜலம் கையால் துடவுங்கூட யோக்யமில்லாமலும் இருப்பது போல, மனிதனும் சிலவிடங்களில் உள்ளே பிரவேசிக்கவும், மற்றும் சிலவிடங்களில் கண்ணால் பார்க்கவும், வேறுஇடங்களில் அதுவும் கூடாமலும் இருக்க, சாஸ்திரமும் ஆசாரமுமிருந்துவற பஞ்சமர்களைக் கூடிக் கூலாவி ஈசனைத்துதிப்பது, ஈசகோபத்துக்குக்கு காரணமாகாது. துராசாரத்தாலும், மாமிசாதி கெட்ட ஆகாரத்தாலும் பஞ்சமர்கள் விலக்கத் தகுந்தவர்களே ஏனெனில் ஒரு சப்தமானது நமது செவிக்கு விஷயமாகும் கால மூலாதாரத்தில் நின்றும் பிராண வாயுவினால் செலுத்தப்பட்டு உதானவாயுவுடன் கலந்து தந்தம் ஓஷ்டம் இவைகளின்

முயற்சியால் வெவ்வேறாக்கப்பட்ட எழுத்துக்களாய்ப் பிரிந்து வெளிவாயுவுடன் கலந்து மனிதனின் செவியினுட்ச் செல்லும், இதனுல் பேசுபவனுடைய மாமிசமும் சிறிது கேட்பவனுள்ளில்ச் செல்லுகிறது. ஒருச்சாண் சமீபத்தில் நின்று பேசினுல் அந்த மாமிசமே முக்கியமாய் கிரஹிக்கப்படும் தூரத்தில்ச் செல்லச் செல்ல அம்மாமிசத்தின் சக்தி அம்சமே பிரவேசிக்கும். அதிக தூரத்தில் நின்று சப்தத்தைக்கேட்டால் அதன் சக்தி சிறிதாகக் குறைந்து அதன்வாயு மாத்திரமே பிரவேசிக்கும். இக்காரணம் பற்றியே பஞ்சமர்களுடனும், கொடிய வியாதி யுள்ளவர்களுடனும் சமீபத்தில் நின்று பேசக்கூடாதென வைத்திய சாஸ்திரமும், தர்ம்ம சாஸ்திரங்களும் முறையிடுகின்றன. இதனுலேயே பஞ்சமர்களை விலக்கி பழகிவருகிறுர்கள். கெட்டவாயு நல்ல சீலகுண முள்ளவர்களையும் கெடுத்துவிடுமென்பது நியாயமான படியால் விலகிநடப்பது உசிதமெனக் கருதுகிறுர்கள். மேலும் சுத்தமான பாலில் அதிக ஜெலம் சேர்ந்து விட்டால் அதை முன்போல் சுத்தமாக்க வெகுநேரம் காச்சவேண்டும். அதுபோலவே சுத்த சத்துவமான ஆகாரநிஷ்டர்கள் துராசாரத்தால் களங்க மடைந்தபோதும் பழய சுத்தியைப்பெற உக்ரதவம் முதலிய சத்மார்க்கமாக மிக கஷ்டமும் பெறவேண்டும். இன்னும் பஞ்சமர்கள் சம்ஸ்காரம் பெறுதவர்கள். பிரும்மணுதிகளோ சம்ஸ்காரத்தால் சுத்திபெற்றவர்கள். அசுத்தியுடன்சுத்திசேறக் கூடாதென்பதுசாஸ்திரங்களின் உள்க்கருத்தாம். இம்மாதிரி வித்தியாச நடையை உபதேசித்த பகவானுக்கும், பேதபுத்தி உண்டோவென்று சாமான்னியர்கள் சங்கிக்கக் கூடும் ஆனுல் ஞான ரூபியான பகவான் உலகிலுள்ள தனது 84 லட்சம் ஜீவராசிகளையும் ரட்சிக்கக் கருதியே சில வித்தியாசத்துடன் சிருஷ்டித்திருக்கிறுர். தந்தையானவன் பல தன் குழந்தைகளிடத்திலும் ஒரேவிதமான அபிமானமிருந்தபோதிலும் நன்னடக்கை உள்ளவரிடம் விசேஷப் பிரீதியும், துர்நடக்கை உள்ளவனை தக்கபடி சீர்திருத்தக் கருதி சிக்ஷிப்பதும் வழக்கம். அதுபோலவே ஈசனும் தனது தர்மமார்க்கத்தை விட்டு நடப்பவர்களான பஞ்சமர்களையும் பல கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாக்கி சிக்ஷித்து சீர்திருத்திவைக்கிறுர். இதனுல் ஈசன் பக்ஷபாதியாக மாட்டார். "தர்மமார்க்கம் கல்பதருவாம். அதை அண்டினவன் அபீஷ்டமடைவான். அண்டாதவன் அவதிப்படுவான். கல்பதரு

வின் மகிமையை அறிந்துசேவிக்காத குற்றம்கல்ப்பதருவுக்கல்ல. அதுபோலவே தர்மரகசியமறியாமல் நடப்பதும் தர்மத்தின்குற்றமல்ல. நம்பினால் நலமளிக்கக்கூடியதேயாம். இதனால் ஈசன் பக்ஷபாதியல்லவென்று விளங்கவில்லையா. தவிரவும், வியாதியினால் பீடிக்கப்பட்ட தன் குழந்தைகளை தாயானவள் சிசுவின் சரீரசுகத்திற்குற்றவாறு புஷ்டியான ஆகாரமும், சிலவற்றிற்குக் கஞ்சியும், சிலவற்றிற்கு பாலும், சிலவற்றிற்கு உபவாஸமும் இட்டு ரக்ஷிப்பது வழக்கம். இதனால் தாய் பேதபுத்தியுள்ளவளாக எவ்விதம் சொல்லக்கூடும். ஈசனும் வெவ்வேறு பிராணிகளுக்கு வெவ்வேறு வழிகளை அவரவர்களுடைய இயற்கைக்குத்தக்கபடி செப்பனிட்டு வகுத்திருக்கிறார் என்பது உண்மை. ஆஸ்திகரே!

1. ஏதோ ஒரு காரியத்தில் புகழ்ப்பெற்ற மனிதன் ஆசரித்தானென்று மாத்திரம் கண்டு மயங்கிவிடாதே.

2. விரூபி ஆசரித்தானென்று தள்ளிவிடாதே.

3. மனதைக்கவரக் கூடிய சித்திரம் எழுதுகிறவன் பார்வைக்கு விரூபியாக இருக்கக்கூடும்.

4. நல்ல தகனசக்தியுள்ளவன் வயிற்றின் உள் உள்ள குணதோஷங்களையறியமாட்டான்.

5. சாரத்தைக் கண்டு சந்தோஷிக்க வேண்டுமேதவிர மனிதனைக் கண்டோ, ரூபம், குலம், கல்வி, இவைகளைக்கொண்டோ மோசம் போய்விடாதே என்றார். இவைகள் உத்தமமான உலக நீதி வசனமாம்.

நற்பிறப்பின் மேன்மையும், கியாதியும் நிழலைப்போல மறைந்து போகக் கூடியனவாம். தைவத்தைத் தடுக்கக் கூடிய கவசம் உலகிலில்லை. யமன் சாதாரண மனிதர்களையும் மாத்திரமல்லாமல் மன்னாதி மன்னர்களையும் இழுத்துச் செல்லுகிறான். கியாதியுள்ள மனிதனை மாத்திரம்கண்டு அவனை நம்பி தர்மமார்க்கத்தை விட்டு நழுவாதே சாரத்தையறிந்து சந்தோஷங்கொள்க. ஆபத்திலும் தர்மமார்க்கத்தை விடாத பாண்டவர்களே மஹிமை பெற்றார்கள்.

ஆஸ்திகர்கள் ஒவ்வொரும் நாம் பாண்டவர்கள் என்று நம்பிக்கையுடன் நடப்போமாகில் பார்த்தசாரதியான பகவான் பாக்கியம் அளிப்பார் என்பதில் ஐயமில்லை.

சங்கரராமசர்மா.

# மதமும், மதஸ்தர்களும்.

ஆஸ்திகோத்தமர்களே ! ஓர் மதம் என்றும் அம்மதத்தைச் சார்ந்தவன் யானென்றும் தன்னைச் சொல்லிக்கொள்ளாதவன் உலகில் யாரொருவரும் இருப்பதில்லை. இது எக்காலத்திலும் தான். ஆனால் இக்காலத்திய விசேஷம் ஒன்றுளது. இந்துமதம் என்ற பெரிய அனாதி மதத்தில் சேர்ந்தவர்கள் மட்டிலும் இதைக் கூறிக்கொள்வது கௌரவத்திற்கு ஏற்றதல்லவென்று கொண்டு விட்டுவிடுகின்றனர். ஆயினும் கோர்ட் வ்யவகாரத்தில் மட்டிலும் சொல்லிக்கொள்ளும் நிர்பந்தமிருக்கிறது. இதிருக்கட்டும். அங்கும் சைவமதம், வைஷ்ணவமதம், என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். முக்கியபேதமான அத்வைத விசிஷ்டாத்வைத த்வைத மதஸ்தனென்று கூறிக்கொள்வதில்லை. ஏனெனில் மதத்ரயஸ்தர்களும் தைவம் இரண்டினுள் ஒன்றைவழிபடுபவர்களே. சைவ வைஷ்ணவச் சண்டையே சிலகாலம் நடந்துமிருக்கிறது. இது தவிர மதச்சண்டை வேறில்லை. இக்கலகமும் இதரமதங்களின் உட்பிரிவுகளிற் போல் உயிரைமாய்த்துக்கொள்ளும் வரை வந்ததில்லை. ஆகவே இவ்விரு பிரிவுதான் இந்துக்களுக்குள் பகிரங்கமாய் இருந்துவருகிறது. இப்போதும் பிராமணர்களுள்ளேயே ஸ்மார்த்தன், வைஷ்ணவன், மாத்வன் என்ற பெயர் எதுவென்றும் இவர்களது அடையாளங்களும் கொள்கைகளும் என்னவென்றும் அறியாதவர்கள் பலர் இருக்கின்றனர் என்று சொல்வது மிகையாகாது. இது இவ்விதமிருப்பது நியாயத்திற்கேற்றதல்லவென்று பகவானது திருவுள்ளமேற்பட்டதென்று இப்போது கொள்ளும்படி உத்திராதிமடம் மாத்வஸ்வாமிகள்மூலம் ஓர் புத்தி உதிக்கின்றது. நமக்கு கெடுதலோ நன்மையோ நேரிடுமாயின் எல்லாம் ஈசனின் கட்டளை எனவே கொள்வோம். அதற்கிணங்கவே ஷை ஸ்வாமிகள் அத்வைதமதம் அவைதிகமென்று சொன்னது தவறு என்றும் இது தைவச்செயல் என்றும் அத்வைதிகள் கூற முன் வரும்முன் அத்வைதிகளைச் சேர்த்து அவர்களது முன்நிலையில் நாம் அத்வைதிகள் நம் மதத்தை நன்கு ஸ்தாபித்தவர் ஸ்ரீ பகவத்பாதாசார்யாரவர்கள். அவர்களின்மகிமை இத்தகையது அவர்கள் சுருதியையே பிரமாணமாய்க் கொண்டு நம்மதத்தை

ஸ்தாபித்தார்கள். அதன் பிறகு ராமானுஜர் விசிஷ்டாத்வைதத்தையும் அவருக்கும் வெகுகாலத்திற்குப்பிந்தி மத்வாசார்யரென்பார் துவிதப்ப்ரபஞ்சத்திலுழன்று கஷ்டமனுபவிக்கும் ஜனங்களுக்கு துவிதம் ஸத்யந்தான் என்றும் ஒருவாறு ஸ்தாபித்தார். முன்னிரண்டு மதங்களில்ஒருவர்க்கொருவர்விசேஷவித்யாஸமடையவில்லை. ஆனால் 3-வது கூறியது முற்றிலும் முரண்படக்கூடியதாயினும் நாளதுவரை அவ்வம்மதஸ்தர் தத்தம் மதங்களை தம்இனத்தில்பாவச்செய்துகொண்டு வர்ணாச்ரமதர்மவியவகாரங்களில் மூவரும்பொதுவாய்க் கூடிக் குலாவிக்கொண்டு வருகிறோம் என்பதை நம் அத்வைதிகள் அறியவேண்டும். இதுவும்இக்காலத்திற்குதவாதென்றுகூச்சலிட்டுக் கூத்தாடும் மனிதர்களுக்கு ஸாதகம் செய்வதற்காககலியின் சங்கல்பத்தை காலானுகுணமாய் நிறைவேற்றிவைப்பதற்காகபகவான்எண்ணி மாத்வாசார்யார்முகத்தினின்றும் இவ்விதம்வசனத்தை உபயோகிக்கும்படிசெய்தனரோ, யாது காரணமோ தெரியவில்லை. அவ்வாசார்யார் சுமார் ஒருவருடகாலமாய் தான்போகுமிடங்களிலெல்லாம் அத்வைதம் அவைதிகம் என்று அத்வைதிகளை அழைத்துக்கூறி வாதுக்கிழுக்கிறார். அம்மாதிரி கும்பகோணத்தில் செய்தார். ஆனால் அது எதற்காகச் சொல்கிறார் என்றும் என் நம் அத்வைத பண்டிதர்கள் அதைக் கண்டிக்கக் கூடாதென்றும்மட்டிலும் யாவருக்கும் தோன்றிற்று. யாராவது சமர்த்தான பண்டிதர்களோ லௌகிகர்களோ நேரிற்போய்க் கேட்டால் அச்சுவாமிகள் அதற்குபூசிமெழுகினாற்போல் எதையோ கூறி அவர்களைத் திருப்பிவிடுகிறார். போதாக்குறைக்கு பிரசித்திபெற்ற ஹிந்துபேபர்காரரையோ அடிக்கடி எழுதிப் பழக்கமுள்ளவர்களையோ தன் வசமாக்கிக் கொண்டிருக்கிறார். அதற்கு முக்கியமாய் நாகராஜசர்மா என்பவரொருவர். அவர் அத்வைதிகள் வந்து எதாவது வியவகாரம் செய்துவிட்டுப்போனால் அதை நடந்தபடி எழுதாமல் மடாசார்யர்களுக்கு ப்ப்ராமாநுகூலமாயும் அத்வைதிகளுக்கு அவமதிப்பைக் கொடுக்கக்கூடியதுமாய் எழுதுகிறார். மதமின்னதென்று ஸ்வரூபமே அறியாத நம் லௌகிக தனவான்கள் அப்பத்திரிகையையே வேதவாக்காய் நினைத்திருப்பதால் அது பொய்யல்ல என்றும், ஸ்வாமிகள் சொல்வது சரிதான். அவருக்கு பதில் கூறமுடியாமல் கோபித்துக் கொண்டால் யாது பயனென்றும் கூறிக்கொள்கிறார்கள். இதன்

உண்மை அறியாததால் யானும் அவ்விதமே எண்ணியிருந்தேன். பிறகு இப்போது சமீபத்தில் இம்மதுரையில் அத்வைத சபையின் சார்பாய் உபன்யசிக்க விஜயம் செய்திருந்த பிர்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களின் முகமாய் நடந்ததை விசாரித்தபிறகு இனி இம்மாதிரி எம்போன்றவர்களின் சங்கையை அகற்றஹிந்து பத்திரிகையின் மூலம் எழுதச் சக்திபற்றவனுதல் பற்றி நம் பத்திரிகையின்மூலமாவது தெரிவித்து तैलबिन्दुरिवाम्भसि ஜலத்தில்எண்ணைச் சொட்டுப் போலகாட்டும் என்று இதில் எழுதலானேன். இதை பத்திராதிபர் ஒரு அம்சத்தையும் குறைக்காமல் அப்படியே பிரசுரிக்க வேண்டுகிறோம்.

(இன்னும்வரும்)

M. N. சுப்ரமண்யசாஸ்திரிகள்.

---

த்வைதாத்வைத விசிஷ்டாத்வைத மதஸ்தர்களுக்கு

# ஓர் விக்ஞாபனம்

புதுக்கோட்டை ஸமஸ்தானம் தானுதிகாரி பிரம்மஸ்ரீ காளி ரெங்காசாரியார் அவர்கள் எழுதுவது

मतत्रयस्थगुरुभिः श्रुत्यन्तविपिनस्थितम् ।
अद्यापि मृग्यमाणन्तं ब्रह्मरूपं हरिं भजे ॥

மூன்று ஆசார்யர்களினுலே வேதாந்தமாகிற காட்டில்இருக்கிற, இப்பொழுதும் தேடப்பட்டுமிருக்கிற பிரும்மஸ்வரூபமான சிம்மத்தை விஷ்ணுவை ஸேவிக்கிறேன்.

1. அத்வைதமதம் அவைதிகமென்கிற ஒரு வார்த்தை கிளம்பியதைக்கேட்டு சில வித்வான்கள் விசிஷ்டாத்வைத மத நிஷ்டர்களும் மேற்படி வாதத்தைக் கண்டிப்பதற்கு எத்தனம் கொள்ளவேண்டாமா? இவர்களையும் இன்னொருநாளில் இந்த மாதிரி விசிஷ்டாத்வைதமதமும் அவைதிகமென்றுசொல்லாதிருப்பார்களா? என்று சொல்லுகிறதைக் கேள்விபட்ட என்மனம் மேல்கண்டதை எழுதத் துணிந்தது.

2. அத்வைதமதம் அவைதிகம் என்று சொன்னவர்களுடைய அபிப்பிராயமே மற்ற 2-மதங்களையும் அவைதிகம் என்று சொன்னதாகவேதாம். ஏனென்றால் நூறு ரூபாய் இருக்கிறவரிடத்தில் 50 ரூபாய் இருக்கிறதுஎன்பது நிச்சயமென்றுதான் என்று அர்த்தமுள்ள "சதேபஞ்சாசது நியாயம்" என்கிறதால் விசிஷ்டாத்வைதத்திலும் அத்வைதமென்று இருப்பதுஸ்பஷ்டம்தானே

3. வியாஸபகவான் எழுதின பிரும்மசூத்திர ஆரம்பமான अथातो ब्रह्मजिज्ञासा என்கிறதற்கு அர்த்தம்செய்யும்காலத்திலேயே சந்திரிகாமுதலியத்வைதமதக்கிரந்தங்களில்பிறர்களுடைய 2மதங்களுக்கும் வியாஸசூத்ரம் ஒன்றுகூடசரியான அர்த்தம் கொடுக்காது- தன் மதத்திற்கு மாத்திரம் தான் சரியாக சூத்திரார்த்தம் சொல்லமுடியுமென்று நான் ஸ்தாபிக்கிறேன் என்று பொருளுள்ள,

प्रतिसूत्रं प्रकाश्येते घटनाघटनेमया ।
स्वीयान्यपक्षयोस्सम्यग्विदां कुर्वन्तु सूरयः ॥

என்று பிரதிக்ஞை பண்ணிக்கொண்டு மற்ற 2-மதங்களை எடுத்துத் தங்கள் மனதுபோல் தூஷித்து எழுதியிருக்கிறது. மேற்படி கிரந்தங்களை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவகளுக்குக் கூட நன்றாய் விளங்குமாதலால் மற்ற 2-மதஸ்தர்களும் அத்வைதம் அவைதிகமென்கிறதற்குப் பதில் சொல்ல வேண்டியவர்களாகவே ஏற்பட்டிருக்கிறது.

4 பிறர் மதக்கிரந்தங்களைத் தூஷிக்கமனமில்லாதவனாயிருந்தாலும் கௌரவபுத்தி உள்ளவர்களுக்கு சின்ன சத்துருவினுடைய உபாதிகள் ஏற்பட்டாலும் கண்ணில் பரமாணு அளவு தூசி விழுந்தால் அதிகமான கஷ்டத்தை உண்டுபண்ணுகிறதென்றபொருளுள்ள,

अल्पोऽपि रिपुराक्रामन्नसह्यः खलु मानिनाम् ।
नेत्रे परागलेशोऽपि निपतन् कुरुते रुजम् ॥

என்கிற நியாயப்படி சில வித்வான்களுக்கு மனவருத்தமுண்டாகி இருப்பதை ஆற்றும்பொருட்டு சொல்ல வேண்டியது அதிகமிருந்தாலும் சொல்பபேதத்தை எடுத்துக்காட்டி கொஞ்ச சந்தோஷத்தை உண்டுபண்ண துணிந்தது என் மனது.

5. வேதபாஹ்யமதங்களென்று எடுத்துக்காண்பிக்க வந்த "ஸர்வதாநுபபத்தேச்ச" இது முதலான சூத்ரபாஷ்யங்களில் கூட நிரஸிக்கப்படுகிற மதங்களுக்கும் கூட வேதபாகத்தில் ஒரு வேத வாக்கியத்தை தங்கள் மதத்துக்கு அனுகூலமாகக்காட்டி அந்த வேதாந்தத்திற்குத் தகுந்த யுக்திகளைக் காட்டியிருப்பதால் எப்படி அவைதிகமென்று சொல்லக்கூடுமென்று கேட்டுக்கொண்டு அதிகமான வேதபாகங்களுக்கும்ஸ்மிருதி புராணங்களுக்கும் விரோதமான அர்த்தங்களாயிருப்பதாலும் அவர்கள் தங்களுக்கு அனுகூலமென்று உதாஹரித்த வேதவாக்யத்துக்கு வேறுவிதமான அர்த்தம் சொல்லி மற்ற வேதாதிகளுக்கு விரோதமில்லாமலே அர்த்தம் சொல்லக்கூடியதாயிருப்பதாலும் வேதபாஹ்யமதங்களென்று சொல்லுகிறோம். வேதபாஹ்யமென்று சொல்லுகிற கிரந்தங்களில் கூட வேதவிருத்தமில்லாதவர்களை எடுத்துக்கொள்கிறோமென்று எழுதியிருக்கிற பாஷ்யகிரந்தங்களை ஸாமான்யமாக உபதேசம் மாத்திரம் பெற்றவர்களுக்குக்கூட எல்லாமதமும் வைதிகமாயிருக்க விசேஷித்து அத்வைதம் அவைதிகம் என்று சொன்னதைக்கேட்டால் ஆச்சர்யப்படக்கூடியதாகவே இருக்கிறது. அவைதிகம்என்கிறபதத்திற்குவேறுஅர்த்தம்ஏதாவதுசொல்லி ஸமாதானம்சொன்னால்கூட மறுபொருளாகச்சொன்னதுபோல் ஆகுமே தவிர சரியானபடி சமாதானமாக ஏற்படாதென்றும் நினைக்கவேண்டியதாகவே ஏற்படும்.

6. உலகத்தில் ஒரு சபை ஏற்படுத்தி ஒரு காரியத்தை பேசும்போது அதிகமான கணக்குள்ளமனுஷியர்களுடையபேச்சு முடிவைத்தான் அனுஷ்டானத்திற்கு கொண்டுவருகிறது. சுவல்ப கணக்குள்ள மனுஷ்யர்களுடைய அபிப்பிராயத்தை எடுத்துக்கொள்வதில்லை என்பதுபோல் சாஸ்திரத்திலும் "பூயஸாம் நியாயம்" என்று ஏற்பட்டிருக்கிறது எல்லாருக்கும்தெரிந்தவிஷயமே இப்படியிருக்க முதல் 'அதாதோப்ரும்மஜிக்ஞாஸா' சூத்திரத்தில் 'அத' என்கிற பதத்திற்கு பிறகு என்கிற அர்த்தம்தான் காவியங்களிலும் புராணங்களிலும் சாஸ்திரங்களிலும்பிரசித்தம். மற்ற 2-மதஸ்தர்களும் மோக்ஷ இச்சைபிறந்தபிறகுதான் பிரும்மத்தை அறிய முயல வேணும் என்று பிறகு என்கிற பொருளையேஎழுதியிருக்கிறார்கள். ஒரு மதஸ்தர் மாத்திரம் பிரசித்தியில்லாததாயும் பிரயோகங்களிலில்லாததுமான 'மங்களம்தான்' பொருள் என்று

அத என்கிற பதத்திற்கு எழுதியிருக்கிறார்கள். அப்படிக்கு அர்த்தம் கொண்டால் மங்களத்தினால் பிரும்ம விசாரம் பண்ண வேணுமென்று அர்த்தமேற்படுகிறது. பொதுவான வேதாந்த சாஸ்திரத்தில் பக்ஷபாதமில்லாத பாஷாந்தரப் படிப்பில் உயர்ந்தவர்களை மத்தியஸ்தர்களாக வைத்து 'அத' வென்கிற பதத்திற்கு எந்த அர்த்தம் சரியாக தோன்றுகிறது என்பதைக் கேட்டால் பிறகு என்ற பொருள் தான் உசிதமென்று சொல்வார்கள் என்பது சந்தேகமில்லை. 2-மதஸ்தர்கள் உதாரணமாக எடுத்து காண்பிவித்த சுருதி புராணாதிகளை விட்டு 'முராரே: திருதிய: பந்தா:' என்பதுபோல் ஆமூலாக்ரம் அப்பிரஸித்தமான சுருதிபுராணங்களுடைய உதாஹரணங்களை எடுத்துக் காண்பித்திருப்பதும் அதற்குக் கண்டனமான பல க்ரந்தங்களிருப்பது என்பதும் வேதாந்த சாஸ்திரத்தில் நிபுணர்களான வித்வான்களுக்கு தெரிந்த விஷயமே. மதக்ரந்தங்களில் எழுதியிருப்பதைப்பற்றி தோஷமாக நினைத்து வாதத்திற்குக் கொண்டு வருவது தர்மமில்லை, அந்தக் கிரந்தக்காரர்கள் அவரவர்களுக்குத் தோன்றிய யுக்தி முதலியவைகளை எழுதுவது வழக்கம்தான். அப்போதைக்கப்போது புதிதுபோல் வாதித்தாலும் ஏற்கனவே ஏற்பட்டிருக்கிற கிரந்தங்களில் எழுதியிருக்கிற யுக்தி முதலியவைகளாகவேதான் இருக்கும் என்பதற்கும் சந்தேகமேயில்லை. அப்படியிருக்க புதிதாகக்கண்டு பிடித்ததுபோல் ஒரு வாக்கியத்தைகிளப்பிவிட்டு அதன் முடிவிற்காக வாக்யார்த்த விசாரம் சாஸ்திரத்தில் இப்போது செய்வதினால் மதங்கள் மாறிவிடாது என்பது உறுதி. ஏற்கனவே நான் இது விஷயமாக விக்ஞாபித்திருந்தாலும் மறுபடியும் மூன்று மதஸ்தர்களும் மதக்ரந்தங்களை முன்னிட்டு ஒருவருக்கொருவர் மனஸ்தாபமில்லாமல் ஒன்றாகவே இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

त्र्याचार्येषु समप्रीत्यै मोहयित्र्यै विपश्चितः ।
त्रिप्रकारार्थबोधिन्यै तस्यै कुर्वे नमस्क्रियाः ॥

———0———

# புராணவிமர்சம்.

## ஸ்திரீஸ்வாதந்தர்யத்தால் வரும் பலன்

"ஸ்ரீயுத காந்திஜீ"யின் மனப்போக்கானது மதவிஷயத்தில் முற்றிலும் விரோதமாக இருக்கிறது. புருடர்கள் தேசகைங்கர்யத்தில் ஈடுபடாவிடில் அவர்களுக்கு (பாகம்) சமையல் செய்து போடாதீர்கள் என "டில்லியில்" பெண்களுக்கு உபதேசிக்கிறாரென்று பத்திரிகையில் கண்ணுற்றோம்.

"காந்தியின்" இவ்வுபதேசமானது ஸ்திரீகளுக்கு குணமுள்ளதா அல்லவாவென்றுச் சற்று இங்கு விசாரிப்பாம். இவர் சொற்படி நடக்கும்பக்ஷத்தில் "ஸ்திரீஸ்வாதந்தர்யம்" ஏற்படுகிறது- மனுவோ न स्त्री स्वातन्त्र्यमर्हति ஒருக்காலும் ஸ்திரீகளுக்கு சுவாதந்தாயமில்லையென்றார். மனுவைவிட புத்திசக்தியால்குணவிசேடங்களை ஒருக்கால் ஸ்திரீஸ்வாதந்தர்ய விஷயத்தில் இவர் கண்டு பிடித்திருக்கலாகாதோவெனில் அவ்விஷயமாய் சரித்திரபரிசிலனம் செய்யும்போது அதிலிருந்துண்டாகும் பலன் ஆபத்தாகவே காணப்படுகிறது. இவ்விஷயத்தில் காந்தியின்உபதேசமும் தர்ம்ம சாஸ்திரத்தின் உபதேசமும் அல்வாத்துண்டுக்கும் வேம்பின்கஷாயத்துக்கும் சமமாய்ச் சொல்லலாம்.

அல்வாத்துண்டுச் சாப்பிடமிக ஹிதமும் ருசியுமாக இருந்தாலும் அது உள்ளிற்சென்ற நிமிஷத்திலேயே காரமும் புளிப்புமாய் மாறி நெஞ்சில் ஓர்வித கரிப்பை உண்டாக்கி அவதிப்பட செய்கிறதென்பதும், வேம்பின் கஷாயம் உட்கொள்ள ஆதியில் கசப்பாக இருந்தாலும் உட்சென்றமாத்திரத்திலேயே ஆரோக்கியம் அக்னி தீபம் முதலிய சரீரசுகத்தையே செய்கிறதென்பதும் அனுபவசித்தமான காரியம்.

இதில் தற்காலம் சுவாதந்திரியப் பேய்பிடித்தவர்களுக்கு காந்தியின் சுவாதந்திரியமொழியாகிய அல்வாத்துண்டு மிகஹிதமாகவும், அதை தடுக்கக்கூடிய தர்ம்மசாஸ்திர உபதேசமானது வேம்பின் கஷாயம்போல அஹிதமாகவும் ஆகிறது. இது சாஸ்திரத்தின் குற்றமல்ல, மனிதனின் குற்றமேயாம் ரோகிக்கு ஔடதமும், அதன் பத்தியமுமே ஹிதமான ஸ்நேஹிதனும், அதை

அறியாமல் ஆஹாரத்தையே ஹிதமான ஸ்நேஹிதனெனக் கருதி விட்டால் ரோகி எவ்விதம் ஜீவிக்கமுடியும். இது வைத்தியனின் குற்றமல்ல ரோகியின் குற்றமேயல்லவா. ஸ்திரீகள் சுவாதந்திரியத்தால் ஆபத்துக்குள்ளானார்களென்றே புராண சரித்திரங்கள் நம்போலுள்ளவர்களை வற்புறுத்தி உபதேசித்துவருகின்றன. அவைகள் பின்வருமாறு:—

1. பூர்வத்தில் தட்சன் பரமசிவனைவிலக்கி யாகம்செய்ய எண்ணினகாலத்தில் தாட்சாயணீதேவி யாகத்தைப்பார்க்க ஆவல் கொண்டாள். அப்போது பரமசிவன் எனக்கு உபசாரமற்ற விடத்தில் எனது பத்நியாகிய நீ போவது கூடாது. எனது அவமானமும்கவுரவமும் உனக்கும்சமமாகஉள்ளதேயாகையால்போக வேண்டாமென்று பலவாறு எவ்வளவோ நன்மொழிகளால் தேற்றியும் தேவி அநுஸரிக்காமல் சுவாதந்திரியத்தால் அவருடன் முறண்படவே எனது அபிப்பிராயத்தை அனுசரியாமல் சென்றால் அதில் அவமானமும், ஆபத்தும்வரும் என்றார். இதைச் சற்று கவனிக்காமல் சுவாதந்திரிய சக்திபலத்தால் தட்சாயணீ யாகஸ்தலம் சென்றாள். அதனால் தேவிக்கு அவமானமும், சரீரத்தியாகமும் உண்டானதாக சிவபுராணமும்.

2. தசரத மகாராஜனின் பத்னி கைகேயி என்பவள் ஸ்திரீ தர்மத்தைச்சிறிதும் கவனியாமல் மந்தரையின் துர்போதனையால் தனது சுவாதந்திரிய சக்தியை பூர்ணமாக உபயோகித்து கோபகிருஹத்தில் படுத்திருந்து 14 வருடகாலம் ஸ்ரீ ராமனை நாடுவிட்டுக்காடுசெல்லும்படி உத்தரவிட்டும் அதனால்பர்த்தாவை இழந்தும், புத்திரனால் தூஷிக்கப்பட்டும், மனவருத்தத்துடன் ஜீவித்துவந்தாள் என்று ஸ்ரீராமாயணமும்.

3. பஞ்சவடியில் மாரீசனைத்துடர்ந்த ராமனுக்கு ஏதோ ஆபத்துவந்திருப்பதாக சீதாதேவி இலட்சுமணனை ராமனிடம் செல்ல உத்தரவிட்டபோது இலட்சுமணன் எவ்வளவோகாரணங்களுடன் பலவழிகளாக அவளைத்தேற்றி உபதேசித்தார். அக்காலத்தில் சீதை தனது சுவாதந்திரிய துர்குணத்தைக்காண்பித்து கர்ணகடோரமாக சிலவார்த்தைகளை மொழிந்து இலட்சுமணனை வெளியேபோகச் செய்தாள். அதன்பயனாக ராவணன் வசப்பட்டு பல துன்பங்களை அடைந்தாள் என்று ராமாயணமும்.

4. ராவணனின் மாதாவானவள் தகாதகாலத்தில் விச்ரவா என்ற மகரிஷியை தன் சுவாதந்திரிய சக்தியால் நிர்ப்பந்தித்து ராவணன் கும்பகர்ணன் முதலிய துஷ்ட சந்தானங்களைப்பெற்று மனம் கலங்கி தவித்தாள் என்று உத்திரகாண்டமும்.

5. இலட்சுமி தேவிக்கு மூத்தசகோதரியாகிய ஜேஷ்டாதேவியை உத்தால மகரிஷி விவாகம் செய்துகொண்டார். ஜேஷ்டா தேவி வேதகோஷம் அனுஷ்டானம் இவைகளைக் கேட்க மனமில்லாதவளாய் தனது துர்க்குண ஸ்வாதந்திரிய சக்தியை உபயோகித்து ஹே மகர்ஷே! வேதத்வனி அநுஷ்டானம் இவைகள் இருக்கப்பட்ட இடத்தில் நானிருக்கமாட்டேன். இதற்கு விபரீதமான தம்பதிகலகம், சூது, பொய் முதலியவைகள் நிறைந்த ஸ்தலத்தில் என்னை வைக்கவேண்டுமென்று முறண்டினாள். இவளது துற்குணத்தை சீர்திருத்துவது அசாத்தியமெனவறிந்த ரிஷி உனக்கு இஷ்டமான இடத்தைக்கண்டு பிடித்துவரும் வரையில் நீ இவ்விடமிருவென்று ஜேஷ்டாதேவியை ஓர் அரசமாத்தடியில் நிற்கவியாய் விட்டுப்போனார். வெகுகாலம்வரை ரிஷி வாராதகாரணத்தால் அம்மரத்தடியில் மனஸ்தாபத்துடன் அழுது கொண்டிருந்தாள். பிறகு விஷ்ணுபகவான் அவளுக்கு அவ்விடத்தையே வாஸஸ்தானமாக்கிவைத்தார் என்று பாத்மபுராணமும்,ஸ்திரீஸ்வாதந்திரியதோஷத்தை நன்குவிளக்கிவைத்திருக்கும் போது இவ்வித ஸ்திரீசுவாதந்திரியத்தை உபதேசிப்பதெவ்வளவு அநீதகாரியம் பாருங்கள்.

सुलभाः पुरुषा राजन् सततं प्रियवादिनः ।
अप्रियस्य च पथ्यस्य वक्ताश्रोताच दुर्लभाः ॥

எப்பொழுதும் பிரியவார்த்தைகளைச் சொல்கிறபுருடர்கள் சுலபமாய் கிடைக்கும். ஆனால் ஆதியில் அப்பிரியமாயும், பின்னால் மிகபத்தியமாயுமிருக்கும் வார்த்தையைச் சொல்கிறவனும், அதைக்கேட்டு நடப்பவனும் உலகில் மிக துர்லபம் என்றார். தற்காலம் இந்தநீதி வாக்கியத்தின்படி ஆதியில் கேட்கும்போது ஹிதமாகத்தோன்றும் உபதேசம் பின்னால் அஹிதமாகுமென்றும் ஆதியில் அஹிதமாகத்தோன்றுமுபதேசம் பின்னால் ஹிதமாகுமென்றும் விளங்கிற்று. எனெனில்:—

“ यदौषधं स्वादुहितञ्चदुर्लभम् ”

ஹிதமும் ருசிகாமுமான ஔடதம் மிக அரிது என்றார்: மகான்களின் உபதேசம் ஔடதம்போல ஆதியில் சிறிது அகிதமாகவே தோன்றுமென்பதும், பிறகு ஹிதமாக மாறுமென்பதும் உண்மையாம்.

கணவன் குற்றங்கண்டு கோபித்து அடிக்கச்செல்லுகையில் அடி என்று எதிர்த்து நிற்கும் மனைவி யமனுக்குச் சமானமாவாள். உதயகாலத்தில் சமையலறைக்குச் செல்லாதவள் சகிப்பதற்கு அருமையான வியாதிக்கு ஒப்பாவாள். சமைத்ததை கணவனுக்கு சாப்பிடுங்களென்று கொடாதவள் வீட்டில்வாழும் பேயாவாள்- இம்மூவரும் தம்மைக்கொண்ட கணவனைக்கொல்லும் ஓர் அற்புத ஆயுதங்களுகொப்பாவார்கள். என்ற நீதி வாக்கியங்கள் ஸ்திரீ சுவாதந்திரியத்தை எவ்வளவு அருமையாக கண்டிக்கின்றன. பாருங்கள்.

இவ்விதம் சரித்திரங்கள் கோஷித்து நிற்கும்போது தேசசேவை செய்யாத கணவனுக்கு பாகஞ்செய்து போடாதீர்கள் என்று சொல்லும் காந்தியின் வாக்யத்திற்கு அர்த்தமேது? மததர்மங்களைப் போதிப்பதில் காந்தி வல்லமையுள்ளவரல்லர். அவர் மததர்மத்தையும், மததர்மம் அவரையும்விட்டு வெகுநாள்சென்றுவிட்டன. மகான்களே! குணதணங்களைப்பயின்றும், உபயோகித்தும், கண்டறிந்தும், அவ்வழிசெல்லுங்கள் மனிதனைக்கண்டு மோசம்போவது மந்தபுத்தியாம்.

மகான்களைக்கண்டு ஆசரிப்பது மகிமைக்கு ஹேதுவாம்.

S. சங்கரராம சர்மா.

# வார விருத்தாந்தம்.

அன்யாய தண்டனை:—மைசூர் அரசாங்கம் 12 வயதிற்குள் பெண்களுக்கு மணம் புரிந்தால் சிக்ஷை என பல வர்ஷகாலமாக ஓர் சட்டமியற்றியுளது. சென்றவாரத்தில் அச்சட்டத்திற்கு பெங்களூரில் இரண்டு பேர் பலியானார்கள். ஒருவர் 5 வயது பெண்ணையும் மற்றொருவர் 8வயது பெண்ணையும் கல்யாணம் செய்வித்தனர். 100 ரூபா ஒவ்வொருவருக்கும் சிக்ஷை விதிக்

கப்பட்டது. அச்சட்டமே அநியாயம், எச்சரிக்கை செய்துவிட லாம். 10, 20 அபராதம் போடலாமென சட்டமே இடமளிக்க ஏழைகளுக்கு இவ்வளவு கடின அபராதம் விதித்து அரசாங்க பொக்கிஷத்தை ரொப்புவது அதைவிட அநியாயம்.

* * * * * * * *

மானம்பெரிதன்றோ ! 12உ திருநெல்வேலியில் ஓர் மஹம் மதியப்பெண்ணை தாய் ஸம்மதமின்றி தூக்கிச்சென்று மணம் செய்துகொண்டதாக ஒருவர் மேல் கேஸ் நடக்கிறது. அந்த ஜாதி ஸ்திரீ கோஷாக்கள் கோர்ட்டுக்கு வந்ததால் பல புருஷர் முன்னே நின்று பல கேள்விகளுக்குப் பதில் சொல்ல நேர்ந்தது. ப்ரௌடையானவளா இல்லையா என்ற கேள்வி பிறந்து டாக்டர் பரீக்ஷைக்கனுப்பப்பட்டது. அந்தோ ! கோர்ட்டுக்கு செல்வோர் கவனிக்க.

* * * * * * * *

இந்தவரை நல்லவரே:— தென்னாட்டு தேசிய வாதி ஸ்ரீயுத ஸத்யமூர்த்தி அய்யர் காங்கிரஸ் தீர்மானத்தில் "கோவில் முதலிய விடங்களில் காங்கிரஸ் தலையிடக்கூடாதென" யோசனை சொல்கி றார். இது எற்கப்படுமா ? என்பது வேறு. இந்த நல்லெண் ணம் இவருக்குத் தோன்றியது ஸ்ரீமதாசார்ய பாதஸேவை யாலோ என்றுதோன்றுகிறது. எப்படியோ, இது சொன்னவரை இவரை பாராட்டவேண்டும்.

* * * * * * * *

இடங்கொடாதீர்:—கமலாதேவி சட்டோபாத்யாய என்ற ஒரு வள் நற்குலத்திலுதித்தவள். தேசீய விஷயமாக வேலை செய்ப வள். 14உ திருச்சியில் உபன்யாஸம் செய்யும்போது வீட்டை விட்டு வெளிவந்த தென்னாட்டுப் பெண்களை மெச்சி சிறையில் சிலர் ஆசாரநிமித்தம் தனியாக சமையல் செய்தது காங்கிரஸிற்கு அவமானமெனக்கண்டித்து இறந்த வாலிபர் பிரேதத்தை பெண் களே தூக்கி அவர்களே கிருத்யம் செய்ததாக அப்படியே நீங் கள் முன்வரவேண்டுமென உபதேசிக்கிறார். இதுபோன்ற சபைக்கு பெண்களை அனுப்பாமல் இவ்வுபதேசத்திற்கு செவி கொடாமல் நம் ஸ்திரீகளைக் காக்கவேண்டும்.

* * * * * * * *

உங்களையுமா பிடித்தது:—சுயமரியாதைப்பித்துபிடித்து பலரை ஆட்டிவருகிறது. பாம்பரையாக ஆலயநிர்மாணம் அன்னஸத்ரம் வேதகாவ்ய பாடசாலை பசுமடம் முதலிய உத்தம தர்மத்தைச் செய்துவரும் நாட்டுக்கோட்டை செட்டிமார்களிடமும் அதுபுகுந்தது. 7,8உயில் காரைக்குடியில் ஷெ சபை கூடி பற்பல நாஸ்திகம் நிறைந்த தீர்மானங்களைச் செய்தது. பரம ஆஸ்திகர்களான இவர்களிடமும் இது பரவியதேயென பரிதாபப்படுகிறோம். முன்னே நவநாகரீகம் புகுந்து வழிகாட்டியது பின்னர் நாத்திகம் புகில் ஆச்சரியமென்ன ?

*  *  *  *  *  *  *  *

சீப்பை ஒளித்தால் கல்யாணம் நிற்குமா:— ஓர் கல்யாணம் நடப்பது ஒருவருக்கிஷ்டமில்லை. சீப்பை எடுத்து பதுக்கிவிட்டால் எப்படி நடப்பது பார்ப்போமென்றாராம். அதேபோல் வேதபாடசாலைகளை பள்ளிக்கூடமாகவும் சத்திரங்களை மாணவர் விடுதியாகவும் இதேபோல் மற்றதை மற்றதாக மாற்றவும் தீர்மானித்தது அச்சபை. வேறென்னதான் அந்தஸபை தீர்மானம் செய்யும்? இத்தீர்மானத்திற்கு எத்தனைபேர் தான் செவிமடுப்பர் ? அது அனுஷ்டிக்கப்பட்டாலும் நிஷித்தமான வேதாத்தியயனம் நின்று முன்போல் சுத்தாத்யயனம் நடைபெறும். மரம் வைத்தவன் நீரளிக்கமாட்டானா ? தேசம் போகும் போக்கைப் பார்த்தேனும் நம்மவர் நல்வழிபற்றாரோ ?

*  *  *  *  *  *  *  *

இம்மையே பெரிதல்ல:— ஔந்து ஸமஸ்தானாதிபதி பாலா ஸாஹேப்பந்த் என்பார் சூர்ய நமஸ்காரத்தால் தேஹவலிமை உண்டாகிறது. மனம் ஏகாக்ரப்படுகிறதெனவும், அதை எப்படி அனுஷ்டிப்பதெனவும், படம் மூலமாக விளக்கி மஹாராஷ்டிர பாஷையில் ஓர் நூல் எழுதி இதரபாஷைகளிலும் வெளியிட்டு பல கலாசாலைகளின் ஆதரவைப் பெற்றிருக்கிறார் "ஆரோக்யத்தை பாஸ்கரனிடம் விரும்பு" என நம்மதம் கூறினாலும்தேஹவலியைக் கொண்டு இவர்கள் செய்யும் வேலை மதவிருத்தமானால் இஹமே பரம் என்ற கொள்கையை நாம் ஆதரிக்கமுடியாது. நீர்க்குமிழி போல் நிலையில்லா வாழ்வைவிட பெருதற்கரிய பேரின்பமாம் மோக்ஷமார்க்கத்தை நாடுக.

இறகில்லா பக்ஷி:—மதவிஷயத்தில் தன் கடமை எனக்கருதி வேறு உத்தியோகங்களை வேண்டாது ஊரூராய்ச் சென்று வர்ணாச்ரம விஷயமாக ஆங்கிலத்தில் சண்டமாருதமாய் உபன்யஸித்து வரும் ஸ்ரீயுத யு. பி. கிருஷ்ணமாசாரியாரை ஆஸ்திகஉலகமறியும். ஸமீபத்தில் அவர் மனைவியை இறைவன் தன்திருவடியிற்சேர்த்து பரீக்ஷித்தும் விடாமுயற்சியுடன் பிரசாரம் செய்துவருமவர்செயல் போற்றற்கேற்றதே. மதஆகாயத்தில் பறந்துவருமிப்பறவைக்கு "ஊருக்குழைப்பானேன்" என தடைசெய்யாது வந்த அவர் உத்தமபத்தினியான ஓரிறகும் முறிந்தது. ஆயினும் 12உ ஓர்ஸநாதந தர்மஸபையை விழுப்புரத்தில் தோற்றிவைத்து உபன்யஸித்தார். இப்பக்ஷிக்கு மதாபிமானிகள் உபகரித்து உபன்யாஸத்தைக் கேட்டேனும் ஆருதளிக்க வேண்டுகை.

* * * * * * * *

பதவியின் பயன் யாது:— யாதாமொரு கௌரவபதவிபெற்றவர், இப்பதவியே பரமபுருஷார்த்தமென நினைத்துப் பலரைக் கொண்டு தேக்கச்சேரி நடத்தி பத்திரிகைக்கெழுதி பலர்தன்னைப் புகழும்படி செய்து மகிழ்வோர். பதவியின் கடமையைச் செய்வோர் ஆயிரத்திலொருவர். மதுரை மீனாக்ஷி கோயில் டிரஸ்டி பதவி பெற்ற ஸ்ரீமான் துரைசாமி நாயுடு கோயிலில் ஓர் இலவச புத்தகசாலை ஏற்படுத்த முயற்சிக்கிறார். தர்மகார்யத்தைச் செய்வோர் தர்மகர்த்தா. போட்டி போட்டு பதவிபெற்று கோவில் சிப்பந்திகளைக்கொண்டு ஆத்மகௌரவத்தை அபேக்ஷிப்பது தர்மமல்ல. காலத்திற்கேற்றபடி கோவில் பணத்தை அரசாங்கமோ மற்றவரோ கைக்கொள்ளாதபடி குருக்கள்மார்களுக்கு வேண்டிய ஆகமங்களைப் புகட்டி மத உபந்யாஸங்களைச் செய்வித்து நல்வழிசெல்வது செலுத்துவதும்தர்மகர்த்தாவின் கடமையாகும்.

* * * * * * * *

தன்வினை தன்னைச்சுடும்:— கர்மாவின் பலன் காலாந்தரத்தில் நேருமானாலும் அத்யுத்கடமான கர்மாவின் பயன் கைமேல் கிடைக்குமென்பது சாஸ்திர ஸித்தாந்தம். ஸாதுவாக ஆண்டைகளை அண்டி சுகமாக ஜீவித்துவந்த பஞ்சமர்களை "அவர்கள் உங்களைத் தாழ்த்திவிட்டார்கள் நாங்கள் தூக்கிவிடுகிறோம்எனக்கூறி பண்டைய வேலையை விட்டு ஜீவனத்திற்கழும்படி செய்ததைவிட

வேறு மஹா பாபமென்ன இருக்கிறது. வடநாட்டில் ஸமீபத்தில் ஜலக்ராமத்திலும் பஞ்சமர்களைகிளப்பி யுத்தத்திற்குஸித்தம்செய்த டாக்டர் அம்பேத்கார 20வயில் பாம்பேயில் நடந்த தீண்டாதார் ஸபையில் அவர்களாலேயே நையப்புடைக்கப்பட்டு மோடாரில் குதித்தோடி உயிர்தப்பினர். இனியேனும் திருந்துவரோ ?

* * * * * * * *

ஊக்கம்நிலைக்குமோ-ஸ்ரீமத்சங்கரபகவத்பாதாளது பிறந்ததினத்தைகற்போத்ஸவமாகவும்பிர்மோத்ஸவமாகவும் நாடெங்கும்கொடாடுகின்றனர். ஸ்ரீமத்ஜகத்குரு காமகோடிபீடாதிபதிஸ்வாமிகள் இந்தப்ராந்தியத்தில் விஜயம் செய்ததாலும் உத்திராதிமட ஸ்வாமிகள்செயலாலும் சென்னையில் பேட்டை பேட்டையாகவன்தெருத் தெருவாக ஆசார்யஜயந்தி அத்புதமாக கொண்டாடப்படுகிறது. அவாள் காட்டிய வழியைப் பின்பற்றி நிரந்தரமாக குருபக்தி கொண்டு கர்மானுஷ்டானத்தில் கண்ணுங்கருத்துமாய் இருந்தால் இஹபரமுண்டாம்.

ஸ்ரீவத்ஸ வே. சோமதேவ சர்மா.

---

ஸ்ரீமச் சங்கரபகவத்பாதாசார்ய ஜயந்தி

## மஹோத்ஸவப் பத்திரிகை.

அவதாரச்ரேஷ்டர்களாகிய ஆதிசங்காசார்யாளுடைய பதினன்காவது ஜயந்தி மஹோத்ஸவம் பாஹுநதிக்கரையில் அமையப்பெற்ற மண்டகளத்தூர் அக்ரஹாரத்தில் ப்ரஜாபதி ஸம்வத்ஸரம் சித்திரைமீ 9௳ (22—4—31) புதன்கிழமை வைசாகசுத்த சஞ்சமியன்று காலை ஸ்ரீ மதாசார்யபூஜை, வேதம் முதலான பாராயணம், அதிதிஸத்காரம், உசிதகாலங்களில், அரியவித்வான்களின் உபந்யாஸங்கள், இரவு ஸ்ரீ மதாசார்ய பிம்பத்திற்கு வீதியில் உத்ஸவம் இவை முதலான வைபவங்களுடன் நடைபெறும்.

சங்கரநிலயம்,<br>மண்டகொளத்தூர்,

இப்படிக்கு,<br>**சிஷ்ய கோடிகள்.**

—0—